Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 199/2025** |
| Deposition of witness for | :: | **PW. 8** |
| Name | :: | **கண்ணன் ( சார்பு ஆய்வாளர்)** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**1 , 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**08.06.2026**

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.02.2025 ம் தேதி நான் பந்தல்குடி காவல் நிலைய சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது நிலைய குற்ற எண். 34/2025 சட்ட பிரிவுகள் 296(b), 115(2) BNS ன் கீழான வழக்கு கோப்பினை பார்வையிட்டு விசாரணைக்கு எடுத்து கொண்டேன்.

2. பின்னர் அன்றே இரவு 09.00 மணிக்கு சம்பவ இடமான வாழ்வாங்கி சிவந்திநாதபுரம் காலனி 1 வது தெருவில் உள்ள புகார்தாரரின் வீட்டின் அருகே சென்று சாட்சிகள் சுப்பிரமணியன், பிச்சைக்கனி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். **(மாதிரி வரைபடம் அசாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. பின்னர் அன்றை தினம் புகார்தாரர் கருப்பசாமி சாட்சிகள் கௌரி, சாந்தி, மேரி மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளான சுப்பிரமணியன், பிச்சைக்கனி, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு சார்பு

ஆய்வாளர் கணேசன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. பின்னர் 03.03.2025ம் தேதி நான் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனை சென்று இவ்வழக்கில் காயம்பட்ட கருப்பசாமிக்கு சிகிச்சை அளித்த மேற்படி மருத்துவமனை மருத்துவர் அருணாச்சலம் அவர்களை விசாரித்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயசான்று அசாஆ.3 ஐ பெற்று மருத்துவரின் வாக்குமூலம் பதிவு செய்தேன்.

5. பின்னர் வழக்கின் விசாரணையில் சம்பவம் உண்மையென தெரிய வந்து எதிரிகளை தேடி வந்த நிலையில் 07.03.2025ம் தேதி இரவு 07.00 மணிக்கு வாழ்வாங்கி பேருந்து நிறுத்ததில் நின்று கொண்டிருந்த எதிரிகளான மலைச்சாமி, கிருஷ்ணகுமார் ஆகியோர்களை கைது செய்து இரவு 7.45 மணிக்கு நிலையம் கொண்டு வந்து தக்க இருநபர் ஜாமீனில் நிலைய பிணையில் விடுவித்தேன்.

6. பின்னர் அன்றைய தினம் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மலைச்சாமி, கிருஷ்ணகுமார் ஆகியோர்கள் மீது சட்டப்பிரிவுகள் 296(b), 115(2) BNS ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கு சம்பவ தினமான 06.02.2025ல் இருந்து 4 நாட்கள் காலதாமதத்துடன் 09.02.2025ம் தேதி தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை வரிசை எண். 8ல் காலதாமதத்திற்கான காரணம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகாரில் வழக்கு சம்பவமானது எத்தனை மணிக்கு நடைபெற்றது என்று குறிப்பிட்டு மணி எதுவும் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். எந்த இடத்தில் வழக்கு சம்பவம் நடந்தது என்று புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் தெருவை பற்றி தான் குறிப்பிட்டுள்ளார். எந்த இடத்தில் புகார் தாரருக்கு காயம் ஏற்பட்டது என்று புகாரில் குறிப்பிட்டு காண்பிக்கவில்லை என்றால் சரிதான். யார் அசிங்கமாக திட்டினார்கள் என்று புகாரில் குறிப்பிட்டு காண்பிக்கவில்லை என்றால் சரிதான்.

2. அசா.1 கருப்பசாமி, அவரது முதல் விசாரணையில் கிருஷ்ணகுமார்

அவரை உதட்டில் கடித்துவிட்டதாகவும், மேலும் கிருஷ்ணகுமார் அவரது இரண்டு கைகளையும் பிடித்து கொண்டு தண்ணீர் குழாயில் தள்ளிவிட்டதாகவும் அவருடைய புகாரிலும் என்னுடைய விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். எந்த வகையான தண்ணீர் வாகனம் சம்பவத்தன்று வந்தது என்று நான் விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் TATA ACE வாகனம் என்று சாட்சிகள் என்னிடம் கூறினார்கள்.

3. மேற்படி வாகனத்தின் ஓட்டுநரை எதற்காக நான் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் பிரச்சனை ஆரம்பித்தவுடனேயே அவர் வண்டியை எடுத்து சென்றதாக தெரியவந்தது. அவர் வழக்கு சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை, அதனால் சாட்சியாக சேர்க்கவில்லை. அசா.2 கௌரி அவருடைய முதல் விசாரணையின்போது மலைச்சாமி அவருடைய கணவரை அசிங்கமாக பேசினார் என்றும் அப்போது " எந்த சுண்ணியும் என்னை ஒன்றும் பண்ணமுடியாது என்றும் எவன் வேண்டுமானாலும் வரட்டும் என்னை ஒன்றும் பண்ணமுடியாது " என்று மலைச்சாமி கூறியதாக சாட்சியம் அளித்துள்ள விவரத்தினை புகாரிலும், என்னுடைய விசாரணையின்போதும் கூறவில்லை என்றால் சரிதான். மலைச்சாமி அசா.2 னின் கணவரை நெற்றியிலும், தோள்பட்டையிலும் கையால் அடித்ததாக எனது விசாரணையில் அசா.2 கூறியுள்ளாரா என்றால் இல்லை.

4. மேலும் இரண்டு எதிரிகளும் அசா.2 னின் கணவரை கீழே தள்ளிவிட்டதில் அவரின் கணவருக்கு உதட்டில் அடிபட்டு இரத்தம் வந்ததாக எனது விசாரணையில் அசா.2 கூறியுள்ளாரா என்றால் இல்லை. அசா.2 நீதிமன்ற முதல் விசாரணையின்போது புகாரை எவ்வாறு எழுத வேண்டும் என்று காவல் நிலையத்தில் போலீசார் சொல்லி கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அவ்வாறு அசா.2 க்கு காவல் நிலையத்தில் எதுவும் சொல்லி கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை.

5. அசா.3 அவரது முதல் விசாரணையில் " மலைச்சாமி அவருடைய வண்டியை எடுக்க முடியாது என்று சொல்லி யாரை வேண்டுமானாலும் அழைத்து வாருங்கள் யார் வந்தாலும் ஓம்ப முடியாது என்று சொன்னார்" என்று கூறியுள்ள விவரத்தினை எனது விசாரணையில் கூறினாரா

என்றால் இல்லை. மேலும் மலைச்சாமி அசா.1 னின் கழுத்தில் கடித்து வைத்ததாக எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அசா.3 சம்பவம் நடந்த பிறகு 5 நிமிடம் கழித்து சம்பவ இடத்திற்கு வந்ததாகவும், அசா.4, 10 நிமிடம் கழித்து சம்பவ இடத்திற்கு வந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ள காரணத்தினால் நான் சாட்சிகள் உண்மையில் சம்பவ இடத்தில் இருந்தார்களா என்று முறையாக விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

6. புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய முகாந்திரம் இல்லை என்றால் சரியல்ல. கால தாமத்ததிற்கு முறையான காரணம் காண்பிக்கப்பட்டாத காரணத்தினால் புகாரானது சொன்ன முறையில் பெறப்படவில்லை என்றாலும் வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. அசா.1 மற்றும் அசா.2 சம்பவத்தின்போது தண்ணீர் லாரி வந்ததாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் நான் தண்ணீர் ஊற்றுவதற்காக டாடா ஏசி வாகனம் வந்ததாக கூறியுள்ளதாலும் வழக்கு சம்பவத்தை நான் சரிவர விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

7. ஏற்கனவே அசா.1 னின் மனைவிக்கும் எதிரிகளுக்கும் இடையே கொடுக்கல் வாங்கல் இருந்தது என்றாலும் மேலும் அசா.1 ஐ எதிரிகள் வேலைக்கு அழைக்காத காரணத்தை மனதில் வைத்து கொண்டு போலியாக கொடுக்கப்பட்ட புகாரை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கு சம்பவத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**